2018 ஜூன் 27]

வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

225—

புறநகர்ப் பேருந்து நிலையம்

***8489—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, ஈரோடு மாநகராட்சியிலுள்ள சோலார் பகுதியில் புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாநகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சோலார் பகுதியில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4-5-2018 அன்று இறுதி வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, பெறப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தைத் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற தாரக மந்திரத்தை முன்னிறுத்தி, தமிழகத்தை தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்றிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். அவர்தம் வழியில் சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களையும்,*

மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மிகப் பெரிய வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற ஒரு நகரமாக உள்ளது. அந்த நகரத்திற்கு, இப்போது மத்திய அரசின் 'Smart City' என்ற திட்டத்தின்கீழ், சிறப்பு நிதியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனது தொகுதிக்குட்பட்ட 46. புதூர் ஊராட்சி மற்றும் லக்காபுரம் ஊராட்சி ஆகிய இரு ஊராட்சிகள், ஈரோடு நகராட்சிக்கு மிகவும் நெருங்கிய பகுதிகளாகவும், கிட்டத்தட்ட 40,000 மக்கள்தொகை கொண்ட பகுதிகளாகவும் உள்ளன. ஆகவே, இந்த இரு ஊராட்சிகளையும் மாநகராட்சியோடு இணைத்து, 'Smart City' என்ற திட்டத்தின்கீழ், நகராட்சி நிதியிலிருந்து இந்தப் புதிய பேருந்து நிலையத்தை அமைத்திட ஆவன செய்திட வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம், மாநகரின் மத்தியில் 11.23 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தில் 63 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. தினசரி 1,200 பேருந்துகள் வந்து செல்கின்றன. தினமும் சுமார் 1 இலட்சத்து 10 ஆயிரம் பயணிகள் இப்பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். இதனால், இங்கு மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகின்றது.

ஈரோடு மாநகரப் பகுதிக்கு என தயாரிக்கப்பட்ட விரிவான போக்குவரத்து திட்ட அறிக்கையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, புதிதாக பேருந்து நிலையம் அமைக்க பரிந்துரைக்கப்பட்ட, லக்காபுரம் பஞ்சாயத்துக்குட்பட்ட சோலார் பகுதியில் உள்ள ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான 51.45 ஏக்கரில் 14 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அவ்விடத்தில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க மாமன்ற தீர்மானம் எண் 190, நாள் 12-8-2015 அன்று அனுமதி வழங்கப்பட்டது. இந்தப் பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திருவாளர்கள்

2018 ஜூன் 27]

J.L. Consultant, Chennai *என்ற தனியார் ஆலோசகர் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி சேவை நிதிக் கழகம், சென்னைமூலம் நியமிக்கப்பட்டது. மேற்படி ஆலோசகர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தேச புதிய பேருந்து நிலைய வரைபடங்கள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களால் 25-9-2017 அன்று வரைபட அனுமதி பெறப்பட்டு, திட்டத்தின் இறுதி வரைவு அறிக்கை 4-5-2018 அன்று, மேற்படி அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை 60 கோடி ரூபாயாகும். இப்பேருந்து நிலையத்தைத் தனியார் பங்களிப்புடன்* PPP *மூலம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. லக்காபுரம் பகுதிக்குட்பட்ட சோலார் பகுதியில் புதிய பேருந்து நிலையம் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும் என்ற நல்ல செய்தியை தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது அன்றைய துணை முதலமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த அண்ணன் தளபதி அவர்களால் திருவொற்றியூர் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்கப்பட்டது. 2011-2016 கால கட்டத்தில் கடந்த ஆட்சியின் முடிவு காலத்தில், 2015 ஆம் ஆண்டு, எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த, அப்போது அமைச்சராக இருந்த திரு. ரமணா அவர்களால் அந்தத் திட்டம் துவக்கி*

[*2018 ஜூன் 27*

வைக்கப்பட்டது. துவக்கிவைக்கப்பட்ட அந்தத் திட்டம் இன்னும் திருவொற்றியூர் நகரில் தொடரப்படாமல் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறது. இன்றைக்குக்கூட நான் வருகின்ற வழியிலே அந்தச் சாலைகளில் சாக்கடை நீர் ஆற்றுநீரைப்போல பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து அந்தத் திட்டத்தை விரைந்து தொடர்வதற்கும், ஆற்றுநீரைப்போல ஓடிக்கொண்டிருக்கும் சாக்கடை நீரை வெளியேற்றுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பானது. மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். அவருடைய தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். பாதாள சாக்கடைத் திட்டம் தொடர்பாக நேற்றுகூட நான் பதில் சொல்லும்போது தெரிவித்தேன். 55 திட்டங்கள் அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்டன. அதில் 35 திட்டங்கள் கைவிடப்பட்டன, அவர்களுடைய ஆட்சிக் காலத்தின்போதே மீதமுள்ள 20 திட்டங்களுக்கு அரசாணையும் வெளியிடப்பட்டதால், அவற்றை மட்டும் எடுத்தார்கள். அதிலும் ஒரு திட்டம் மட்டும்தான் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 19 திட்டங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் நிதி ஒதுக்கினார்கள் என்றுதான் சொன்னேன்; வேறொன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற நிலைமை அங்கேயிருந்தால் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு*

2018 ஜூன் 27]

மறையாமல் நீக்கமற நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழித் தொண்டர்களாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழித்தடத்திலே இன்று தமிழக அரசை இயக்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமை பொருந்திய அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் வளர்ந்து வருகிற மாநகரமாக இருக்கிறது. சேலம் மாநகரத்தில் நகரப் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் என ஆயிரக்கணக்கான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சேலம் மாநகரத்தில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் என இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்கி வருகின்றன. பழைய பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்துகளும், புதிய பேருந்து நிலையத்தில் வெளியூர் செல்லக்கூடிய பேருந்துகளும், இரவு நேரத்தில் தனியார் சொகுசுப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்து வருகின்ற சேலம் மாநகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்ற காரணத்தால், கிழக்கு மார்க்கமாக, சென்னை மார்க்கமாக சென்னை கிழக்குப் பகுதியிலிருந்து கடலூர், சிதம்பரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்ற பேருந்துகள் அனைத்திற்கும் உடையார்பட்டி பகுதியில் தனியாகப் பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க, திங்கள்நகர், அம்மாபேட்டை, நன்னிலம், களியக்காவிளை,

வாடிப்பட்டி, கருமத்தம்பட்டி, பேரூர், தேவர்சோலா, நடுவட்டம், பொன்னம்பட்டி மற்றும் காவேரிப்பாக்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையங்கள் ரூ.35.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு (2018-2019) நகராட்சி நிருவாகம் தொடர்பான மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்ற அன்று அறிவிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

கோயம்புத்தூர், சேலம், மதுரை போன்ற மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெருமுயற்சி செய்து மூன்று Bus Ports அமைக்க மத்திய அரசின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, விவரமாக எடுத்துச்சொல்லி, கடுமையான முயற்சிகளை எடுத்ததன் காரணமாக, Bus Port அமைக்கும் ஒரு நல்ல வாய்ப்பு சேலம் மாநகருக்குக் கிடைத்திருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேருந்து நிலையங்களைப் பல்வேறு இடங்களில் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாலும்கூட, அதற்கான நிலம் கையகப்படுத்தும் சூழ்நிலைகளில்தான் பிரச்சினை இருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

226—

உலக வர்த்தக மையம்

***7094—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உலக வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?